**மாநிலத் திட்ட இயக்ககம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**

**சென்னை - 600006.**

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| மாநில திட்ட இயக்குநர்,<br>மாநில திட்ட இயக்ககம்,<br>ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,<br>சென்னை -6. | முதன்மைக் கல்வி அலுவலர்,<br>அனைத்து மாவட்டங்கள். |

**ந.க.எண்.3697/A11/Voc/SS/2023 நாள். 06.02.2024**

**பொருள்:** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – தொழிற்கல்வி - அகப்பயிற்சி நிறைவு செய்த 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.1000/- ஊக்கத்தொகை வழங்குவது தொடர்பான வழிமுறைகள் – சார்பு.

**பார்வை:**
1. பள்ளி கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ஒ.க.எண்.50510/பிடி2/இ2/2021 நாள்:13.09.23.
2. இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண்.3697/A11/Voc/SS/2023 நாள்:10.10.2023.

*****

பார்வையிலுள்ள பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்கள் செயல்முறையின் படி அரசு மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற்கல்வி பாடப்பிரிவில் பயிலும் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் 10 நாட்கள் அகப்பயிற்சியினை (Internship) மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது. அதற்கான நிதி பார்வை 2 யிலுள்ள இவ்வலுவலகக் கடிதத்தின் படி அனைத்து மாவட்டங்களுக்கும் விடுவிக்கப்பட்டது.

பார்வை 1 யிலுள்ள செயல்முறையில் தெரிவிக்கப்பட்டதின்படி அகப்பயிற்சியினை நிறைவு செய்துள்ள மாணவர்களுக்கு ஊக்கத்தொகை அவரவர் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. அதன்படி அகப்பயிற்சி நிறைவு செய்த ஒவ்வொரு மாணவருக்கும் ரூ.1000/- ஊக்கத்தொகையாக அவர்கள் வங்கி கணக்கில் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக அகப்பயிற்சி நிறைவு செய்த 12 ஆம் வகுப்பு மாணவர்களின் வங்கி கணக்கு விவரம் பெறப்பட வேண்டும். மாணவர்களின் வங்கிக்கணக்கு விவரம் மற்றும் அகப்பயிற்சிக்கு சென்ற தொழிற்சாலைகள்/ நிறுவனங்கள் வழங்கிய சான்றிதழ்களை tnemis.tnschools.gov.in இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கான வழிவகை

செய்யப்பட்டுள்ளது. இவ்விவரங்களை ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் tnemis.tnschools.gov.in இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். பதிவேற்றம் செய்வதற்கான வழிமுறைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இத்தகவல் மற்றும் வழிமுறைகளை சார்ந்த அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு உடனடியாக தெரிவிக்கப்பட வேண்டும். பள்ளியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள விவரங்களை வட்டார வளமைய மேற்பார்வையாளரால் tnemis.tnschools.gov.in இணையதளத்தில் சரிபார்ப்பதற்கான வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாணவர்களின் வங்கி கணக்கு விவரங்கள் மற்றும் மாணவர்கள் அகப்பயிற்சி மேற்கொண்டதற்கான விவரங்கள் வட்டார வளமைய மேற்பார்வையாளரால் சரிபார்க்கப்பட்ட பின்பு அகப்பயிற்சி நிறைவு செய்த 12ஆம் வகுப்பு மாணவர்களுக்குரிய ஊக்கத்தொகை மாவட்டத்திலிருந்து மாணவர் வங்கி கணக்கிற்கு SNA மூலம் அனுப்பப்படவேண்டும். அதற்குரிய நிதி, மாவட்டத்திலிருந்து 12 ஆம் வகுப்பு மாணவர்களில் அகப்பயிற்சி நிறைவு செய்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை விவரம் பெறப்பட்டு அதன் அடிப்படையில் விடுவிக்கப்படும்.

எனவே அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் உரிய நேரத்தில் இப்பொருள் சார்ந்த பணியினை மேற்கொள்ள தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

6/2/2024.

மாநில திட்ட இயக்குநருக்காக